# தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026

# மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தேர்தல் பரப்புரைப் பயணம்!



**16.04.2026 வியாழன்**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
4 மணி - புளியங்குடி - தி.மு.க.
5.30 மணி - சங்கரன்கோவில் - காங்கிரஸ்
9 மணி - விருதுநகர் (பொதுக்கூட்டம்) - தே.மு.தி.க.

**17.04.2026 வெள்ளி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி - ம.தி.மு.க.

**18.04.2026 சனி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி - ம.தி.மு.க.

**19.04.2026 ஞாயிறு**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருநெல்வேலி - தி.மு.க.
பாளையங்கோட்டை - தி.மு.க.
மேலப்பாளையம்

**20.04.2026 திங்கள்**

கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்
கடையநல்லூர் தொகுதி - ம.தி.மு.க.
சாம்பவர் வடகரை, ஆய்குடி,
செங்கோட்டை (பொதுக்கூட்டம்)

**21.04.2026 செவ்வாய்**

சங்ரகரன்கோவில் தொகுதி - காங்கிரஸ்
மாலை 4மணி திருவேங்கடம் (பொதுக்கூட்டம்)

**'தாயகம்'**
*சென்னை - 8*

**தலைமைக் கழகம்**
*மறுமலர்ச்சி தி.மு.க.,*



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு மாற்றுக் கட்சி நிர்வாகிகள் இளைஞர்கள் அனைவரும் மாவட்ட கழக செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி வெல்லும் வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் தௌபிக் அலி முன்னிலையில் 75ஆண்டு கடந்து பவள விழா கண்ட பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர் . இன்னும் கொள்கை குன்றாது பல நூற்றாண்டு நிலைத்து நிற்கும் கழகத்தை வலுசேர்க்க இணைந்த இளைஞர்கள் அனைவரையும் மாவட்டக் கழக செயலாளர் வரவேற்றார்.



சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், ஒன்றிய செயலாளர் எம்.ஏ.கடம்பசாமி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |
| காலை 10.30 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| காலை 11.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| மாலை 4.00 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| மாலை 4.45 மணி | போடிநாயக்கனூர் | பழனிசெட்டிபட்டி. |
| மாலை 5.45 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| இரவு 7.15 மணி | நிலக்கோட்டை | கொடைக்கானல் சாலை. அம்மைநாயக்கனூர். |
| இரவு 8.00 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| இரவு 8.45 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 15.4.2026

கலைஞர் 100
1924 - 2023



## தமிழ்நாட்டு மக்கள் புயல், மழையால் பாதிக்கப்படும்போது,

# நாம் கேட்கும் நிதியில் கால்வாசி கூட ஒன்றிய அரசு கொடுப்பது கிடையாது!

## கோவில்பட்டி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**கோவில்பட்டி, ஏப்.16 –**

**தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கா.கருணாநிதியை ஆதரித்து, கோவில்பட்டி பேருந்து நிலையம் அருகில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.**

தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி.; இந்த கோவில்பட்டி தொகுதியில், முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுத்து வழங்கியுள்ள வேட்பாளர் கருணாநிதி அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்

தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது வாழ்நாளில் தோல்வியே கண்டதில்லை. அவர் பெயரை தாங்கியுள்ள கோவில்பட்டி தொகுதி திமுக வேட்பாளரும் வெற்றியை மட்டுமே காண வேண்டும். அதுவும் ஒரு மிகப்பெரிய வெற்றியை நீங்கள் அவருக்காக பெற்றுத் தர வேண்டும்.

நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம் என்ற நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும், உரிமையுடனும் மக்களை சந்தித்து வாக்கு கேட்கிறோம். மகளிர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்குவேன் என்று முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்தார். இன்று தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. தேர்தல் முடிந்த உடன், இந்தத் தொகை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



அதேபோல், முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்கு முதல் கையெழுத்திட்டார். இது மகளிருக்குப் மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது. இவ்வாறு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முதலமைச்சர் வழங்கி வருகிறார். அதேபோல், ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதற்காக ஒன்றிய பாஜகவுடன் தொடர்ந்து போராடி, உரிமைகளையும் தமிழ் அடையாளங்களையும் காக்கும் ஆட்சியாக திமுக ஆட்சி செயல்பட்டு வருகிறது.

பாஜக தமிழ்நாட்டுக்கு எந்த திட்டத்தையும் தருவதில்லை. தமிழ்நாட்டுடைய நிதியை எடுத்து கொண்டு போகின்றனர். ஆனால், தமிழ்நாட்டுக்கு மறுபடியும் தர வேண்டிய நிதி எதுவுமே வந்து சேர்வது கிடையாது. இந்தி படித்தால் தான் தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி ரூ.3600 கோடியை ஒன்றிய பாஜக அரசு பிடித்து வைத்துள்ளது.

தமிழ்நாட்டுக்கு மெட்ரோ ரயில் திட்டம் கேட்டால், மக்கள் தொகையை காரணமாகக் காட்டி இல்லை என்கின்றனர். ஆனால், வட இந்தியாவில் மக்கள் தொகை குறைவாக உள்ள பகுதிகளுக்கும் மெட்ரோ திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் புயல், மழையால் பாதிக்கப்படும்போது, நாம் கேட்கும் நிதியில் கால்வாசி கூட ஒன்றிய அரசு கொடுப்பது கிடையாது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் 61 சதவீத நிதியை தமிழ்நாடு அரசு வழங்குகிறது; அவர்கள் 39 சதவீதம் மட்டுமே வழங்குகின்றனர். இப்படி தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய திட்டங்களுக்கு வழங்கும் நிதியை குறைச்சுக்கிட்டே வருகின்றனர்.

பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு, 100 நாள் வேலைத் திட்டத்தில் யாருக்கும் முறையாக வேலை கிடைப்பதில்லை. தற்போது ஒரு சட்டத்தை கொண்டு வந்துள்ளனர். டெல்லியில் இருந்து கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள ஊர்களுக்கு என்ன வேலை வழங்குவது, எத்தனை பேருக்கு வேலை வழங்குவது என்பதனை அவர்கள் தீர்மானி க்கிறார்கள்.

மேலும் அந்தத் திட்டத்தில் நிதியை குறைத்து, தமிழ்நாடு அரசு தான் வழங்க வேண்டும் எனக் கூறுகின்றனர். இப்படி அந்தத் திட்டத்தை வீணாக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை பாஜகவுடன் கூட்டணியில் உள்ள எடப்பாடி பழனிசாமி கேட்க மாட்டார். ஏனென்றால், அவர் தன்னை மட்டுமே பாதுகாத்துக் கொள்வார். மற்றவர்களை பற்றி எந்த அக்கறையும் அவருக்கு கிடையாது. தமிழ்நாட்டை பற்றி மட்டுமல்ல தன்னை வளர்த்த கட்சியை பற்றி கூட அவருக்கு அக்கறை இல்லை.

யாரிடம் ஆசீர்வாதம் வாங்கி முதலமைச்சர் பதவிக்கு வந்தாரோ, இன்று அந்த அம்மையாருக்கே கட்சியில இடமில்லை என்று சொல்லக் கூடியவர்தான் எடப்பாடி பழனிசாமி. திமுக ஆட்சியில் தூத்துக்குடி இன்று ஒரு வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய, தொழில் வளங்கள் வந்து கொண்டிருக்கக்கூடிய, வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய மாவட்டமாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துவிட்டன. அதிலும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துவிட்டது என பாஜக கூறுகிறது. பெண்களுக்கு எதிரான ஒரு குற்றம் கூட நடைபெறவில்லை என்ற நிலை வர வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்று கருத்து இல்லை.

எடப்பாடி பழனிசாமி பொள்ளாச்சியில் குற்றவாளிகளை காப்பாற்றினார். ஆனால் திமுக ஆட்சியில் குற்றவாளிகளை காப்பாற்றாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவிலே நியாயம் கிடைக்கக்கூடிய வகையில் செயலாற்றி இருக்கிறார்.

தேசிய அளவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சராசரி 65 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில 23 சதவீதம் தான். பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாக உள்ளன.

வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம். தொழில் முதலீடுகளை கொண்டு வந்து கொண்டே இருக்கிறோம். அதனால் அவர்களுக்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை என்பதால், பொய், புனை கதைகள் சொல்லிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இந்த தேர்தலில் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை 3,24,070 பேருக்கு வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 800 கிலோ மீட்டருக்கான சாலை பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. கலைஞர் கனவு இல்லம் 2,217 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமையும். அப்போது ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், 20 லட்சம் விவசாயிகளுக்கு மேல் பயன்படக்கூடிய வகையிலே அவர்களுக்கு எந்தவித மீட்டரும் பொருத்தாத மின் மோட்டார்கள் வழங்கப்படும். மகளிர் உரிமை தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆயிரத்திலிருந்து ரூ.1500ஆக உயர்த்தி வழங்கப்படும்.

முதியோருக்கு தரக்கூடிய உதவித்தொகை ரூ.1200லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். அனைவரும் எதிர்பார்க்கக்கூடிய ரூ.8000 கூப்பன் மக்களிடம் வழங்கப்படும். நீங்கள் உங்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருக்கக்கூடிய கடைக்கு போய் உங்களுக்கு பிடித்த பொருட்களை வாங்கி கொள்ளலாம்.

கலைஞர் கருணாநிதி வழியில் வந்துள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முதலமைச்சர் வாக்குறுதியை தந்தால் அதை நிச்சயமாக நிறைவேற்றி தருவார். அதை நிறைவேற்றி தருவதற்கான ஒரு வாய்ப்பை நீங்கள் இங்கே வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை ஒட்டி கோவில்பட்டியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



மதுரை மத்திய தொகுதி வெற்றி வேட்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனை ஆதரித்து 22 ஆவது வார்டில் மத்திய தொகுதி பொறுப்பாளர் வி.பி.ராஜன் பகுதி செயலாளர் ஆ.நீலமேகம் மற்றும் வட்டப் பொறுப்பாளர் வைகை பரமன் 22 வது வட்டச் செயலாளர் எம்.கே.எம்.முருகன் தலைமையில் வாக்குச் சேகரித்தனர்.

## தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

# உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க.இளங்கோ அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **செ.மதன்ராஜ்** *(13/91, முந்திரித்தோட்டம், பரமன்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் - 628 213)* அவர்கள் உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 14.04.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.





நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல். ஏ.பாளை 7 வது வார்டு உள்பட பல்வேறு வார்டுகளுக்கு சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் வண்ணை சேகர், தினேஷ், செய்யது முஹதீன், பிரபு பாண்டியன், பிரான்சிஸ், ரேவதி பிரபு, மகேஸ்வரி, சுண்ணாம்பு மணி, இந்திரா மணி, ஜெகநாதன், ராஜேஸ்வரி, பத்மராஜ், ராஜ், ரஹ்மத்துல்லா, வல்லநாடு முத்து, காசிமணி, அனிதா, தேவிகா உள்பட பலர் கலந்து கொண்டனர்.